DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
HMOP. No. 211/2024
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : **கார்த்திகேயன்** |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.02.2026 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பில் முதலாவது சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது. 19.11.2023 ம் தேதியன்று உபயமனுதார்களுக்கு நடந்த திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் **ம.சா.ஆ.1** ஆகும். திருமணத்திற்கான சான்றிதழ் அசல் **ம.சா.ஆ.2** ஆகும். எனது ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **ம.சா.ஆ.3** ஆகும். திருமணப் புகைப்படம் **ம.சா.ஆ.4** ஆகும். 23.04.2024 ம் தேதியில் மனுதாரர் வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் போஸ்டல் ரசீதுடன் **ம.சா.ஆ.5** ஆகும். 27.04.2024 ம் தேதியில் எதிர் மனுதாரர் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **ம.சா.ஆ.6** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

எங்களுக்கு 19.11.2023ம் தேதியன்று சங்கரன்கோவிலில் உள்ள பெரிய கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்தபின்னர் எதிர் மனுதாரர் என்னுடன் பெரியகோவிலான்குளத்தில் இருந்தார் பின்னர் சென்னையில் உள்ள போலிஸ் குடியிருப்பு பகுதியில் குடியிருந்தோம். எங்களுக்கு குழந்தைகள் இல்லை. திருமணத்தின்போது எதிர் மனுதாரர் எனக்கு கொடுத்த பொருட்கள் அனைத்தும் எதிர் மனுதாரரிடம் தான் உள்ளது என்னுடைய பொருட்களும் எங்களிடம் தான் உள்ளது. மனுவில் கூறியுள்ள சங்கதிகள் உண்மையில்லை என்றால் சரியல்ல. கடந்த 2024ம் வருடம் முதல் நானும்,எதிர் மனுதாரரும் கருத்து வேறுபாடால் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். பெரியோர்களை வைத்து சேர்ந்து வாழ சமரசம் பேசி சேர்ந்து வாழ்வதற்கு மார்க்கம் இல்லை என்றால் சரிதான்.

Sd/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.